# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.
# EA 02/2021 in EP 03/2021

2025–ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 28–ம் நாள் செவ்வாய்க்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023–ஆம் ஆண்டு பாரதிய சாஷ்சிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா. சந்திரமோகன், பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 28.10.2025 | | |
| பெயர்: | ஆறுமுகம் (PW–2 Cross ) | தகப்பனார் பெயர்: | சுப்ரமணியன் |
| கிராமம்: | குச்சிபாளையம் | தாலுக்கா: | சீர்காழி |
| தொழில்: | விவசாயம் | வயது : | 60/2025 |

<u>எதிர்மனுதாரர்/மனுதாரர்/வாதி தரப்பில் குறுக்கு விசாரணை : 28.10.2025</u>

**(ஆரம்பித்த நேரம்– 13.24)**

1. என்ன பரிகாரம் கேட்டு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் தாவா சொத்து நிலத்தை மனுதாரர் சரிதா கிரயம் பெற்றுவிட்டார், அந்த நிலத்தில் கணேசமூர்த்தி, மீனாட்சி, கண்ணன் இடையூறு செய்வதாக மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அந்த கிரயம் என்பது பதிவு செய்யப்பட்டதல்ல. மொத்தம் 6 புல எண்களுக்கு கிரயம் பெறப்பட்டது. தாவா சொத்துக்கள் சரிதா பெயரில் நேரடியாக வாங்கப்படவில்லை, அவருடைய மாமியார் செந்தமிழ்ச்செல்வி பெயரில் வாங்கப்பட்டது என்றால் சரிதான்.

2. செந்தமிழ்ச்செல்வி தற்போது உயிருடன் இல்லை, அவர் எப்போது இறந்தார் என்ற விபரம் எனக்கு தெரியாது. செந்தமிழ்ச்செல்விக்கு துரை, தமிழரசன், ரவிச்சந்திரன், மோகன்குமார், ரத்தினகுமார் ஆகிய 5 மகன்கள் வாரிசுகள் என்றால் சரிதான். ரத்தினகுமாரின் மனைவிதான் மனுதாரர் சரிதா என்றால் சரிதான். தாவா சொத்து ரத்தினக்குமாரின் பாகத்திற்கு ஒதுக்கப்பட்ட சொத்து என்றால் சரிதான். அவ்வாறு ஒதுக்கப்பட்டதற்கு எழுத்துப்பூர்வ

ஆவணம் கிடையாது, வாய்மொழியாக பிரிக்கப்பட்டது. எந்த வருடம் பிரிக்கப்பட்டது என்பது பற்றி எனக்கு தெரியாது.

3. தாவா சொத்தில் உள்ள 7 புல எண்களுக்கும் விஸ்தீரணம் எனக்கு தெரியாது. கணேசமூர்த்தி, மீனாட்சி, கண்ணன் ஆகியோர் தங்களுடைய சொத்துக்களை செந்தமிழ் செல்விக்கு எழுதிக்கொடுத்ததால் மேற்படி நபர்களுக்கு வழக்கு சொத்துக்களில் எவ்வித உரிமையும் கிடையாது என்றால் சரியல்ல. ம.சா.ஆ.4 ஆவணமான பத்திரம் எப்போது வாங்கப்பட்டது என்ற விபரம் எனக்கு தெரியாது. கீழசட்டநாதபுரத்திலுள்ள முன்னாள் கிராம நிர்வாக அலுவலர் சீனிவாசன் என்பவர் வீட்டில் வைத்து எழுதப்பட்டது. அவரே டைப் செய்தார்.

4. என்னுடைய கையெழுத்து ஆங்கிலத்தில் போடப்பட்டது. எனது முகவரி மற்றும் தகப்பனார் பெயர் எதுவும் நான் எழுதவில்லை, கேட்டார்கள், கொடுத்தேன், சீனிவாசன் தான் எழுதினார். அந்த ஆவணத்தில் வேறு எத்தனை நபர்கள் சாட்சி கையெழுத்து செய்தார்கள் என்றால் நானும், எழுதியவரும் மட்டும் தான் கையெழுத்து செய்தோம். மொத்த புல எண்ணிலும் சேர்த்து 81 செண்ட் நிலம் உள்ளது. அதில் 40 ½ செண்ட் நிலம் தான் செந்தமிழ்செல்விக்கு கணேச மூர்த்தி வகையறாவால் கொடுக்கப்பட்டது, மீதமுள்ள 40 ½ செண்ட் தாவா சொத்திற்கு கிழக்கு புறத்தில் உள்ளது. அந்த மீதமுள்ள 40 ½ செண்ட்டை ராஜாராமனிடம் கணேசமூர்த்தி வகையறா விற்பனை செய்தனர். அது பதிவு செய்யப்பட்டுள்ளதா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

5. இந்த வழக்கு சொத்தில் கணேசமூர்த்தியும் மீனாட்சியும் அவர்களது பாகத்தை பொறுத்து இந்த வழக்கில் நிறைவேற்று மனு தாக்கல் செய்து 32 செண்ட்டை நீதிமன்றம் மூலமாகவே சர்வேயர், VAO, நீதிமன்ற அலுவலர் மூலமாக 24.04.2025ல் வசம் எடுத்து கொடுக்கப்பட்டது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. மேற்படி வசம் எடுக்கப்பட்ட விபரம் கடந்த 17.06.2025ல் இந்நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

6. கண்ணனுக்கு உரிய பாகம் மட்டும் வசம் கேட்டு மனுவானது நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது, இந்த சமயத்தில் இந்த மனுவினை மனுதாரர் சரிதா தாக்கல் செய்து அதற்கு ஆதரவான நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. கணேசமூர்த்தி, மீனாட்சிக்கு உரிய பாகம் அவர்களுக்கு வசம் எடுக்கப்பட்டுவிட்டது, அதேபோல் கண்ணனுக்கு உரிய பாகம் அவருடைய வசத்தில் உள்ளது என்றால் சரியல்ல. வழக்கு சொத்துக்கள் அனைத்தும் நீதிமன்றம் மூலமாகவே முதல்நிலை மற்றும் இறுதிநிலை தீர்ப்பாணை ஏற்பட்டு சட்டப்பூர்வமாக பாகங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன என்றால் சரியல்ல.

7. மனுதாரர் சரிதா பொறுத்தோ செந்தமிழ்செல்வி பொறுத்தோ இந்த வழக்கில் எவ்வித உரிமையும் இல்லை என்பதால் எவ்வித பரிகாரமும் கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. அதனால் மனுதாரர் தாக்கல் செய்த மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

**2 மற்றும் 3ம் எதிர்மனுதாரர்களால் ஏற்றுக்கொள்ளப்படுகிறது.**

**7 மற்றும் 8ம் மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.**

**4,5,6 ம் எதிர்மனுதாரர்களின் குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

**(முடிவு நேரம்– 13.52)**